## கேரள முதலமைச்சர் தேர்வு:

# ராகுல் முயற்சி தோல்வி!

## வி.டி.சதீசன் முதல்வராக தேர்வானார்!

திருவனந்தபுரம், மே 15–

கேரளத்தின் முதலமைச்சராக வி.டி.சதீசன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கே.சி.வேணுகோபாலை முதலமைச்சராக்கும் ராகுல் காந்தியின் முயற்சி தோல்வியடைந்தது.

கேரள சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்றால் ஒரு சில நாட்களிலேயே முதல்வரை தேர்வு செய்து விடுவோம் என்று தேர்தலுக்குமுன், காங்கிரஸ் தலைவர்கள் கூறினர். ஆனால், வெற்றிபெற்று 10 நாட்கள் கடந்த பின்னரும் முதல்வரை தேர்வு செய்ய முடியாத அளவுக்கு காங்கிரஸ் கட்சியில் சிக்கல் ஏற்பட்டது. முதல்வர் பதவிக்கு வி.டி.சதீசனுக்கும், ரமேஷ் சென்னித்தலாவுக்கும், எம்.பி. கே.சி.வேணுகோபாலுக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டது. காங்கிரஸ் எம்.பி.யான கே.சி.வேணுகோபாலை முதலமைச்சராக்க ராகுல் காந்தி முயற்சித்தார். ஆனால், தேர்தலில் போட்டியிடாத கே.சி.வேணுகோபாலை முதலமைச்சராக்க முயற்சிப்பதற்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்நிலையில், எதிர்ப்புக்கு பணிந்த காங்கிரஸ் கட்சி, வி.டி. சதீசனை கேரள முதலமைச்சராக தேர்வு செய்து அறிவித்துள்ளது. இதனிடையே, கே.சி. வேணுகோபாலை, கேரள மாநில முதலமைச்சராக்கும் ராகுல் காந்தியின் முயற்சி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவால் மூடப்படும்

# டாஸ்மாக் கடைகளில் பணிபுரிவோருக்கு மாற்று வேலை வழங்குக!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு. சண்முகம் அறிக்கை!

சென்னை, மே 15-

தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவால் மூடப்படும் டாஸ்மாக் கடைகளில் அங்கு பணிபுரிந்து வந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று தொ.மு.க. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை வாயிலாக புதிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.



இது குறித்து தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் அவர்களின் அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் அமைந்துள்ள புதிய அரசின் உத்தரவின் அடிப்படையில் கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து மற்றும் ரெயில் நிலையங்களுக்கு அருகில் 500 மீட்டர் தொலைவில் உள்ள மதுபான கடைகளை மூடிட முடிவு செய்துள்ளதாக அறிகிறோம்.

டாஸ்மாக் நிறுவனம் 2003 ஆம் ஆண்டு முதல் அரசின் பொதுத்துறை நிறுவனமாக இயங்கி வரும் நிலையில் சுமார் 24000 தொழிலாளர்கள் சுமார் 23 ஆண்டுகளாக உதவி விற்பனையாளர், விற்பனையாளர் மற்றும் மேற்பார்வையாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். அந்த தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் மூடப்படும் கடைகளில் பணிபுரிந்து வருபவர்களை அரசின் பிற துறைகளில் நிரந்தர வேலைவாய்ப்பும், கால முறை ஊதியமும் வழங்கிட வேண்டுமென தொ.மு.ச. பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட, பகுதி, ஒன்றிய,

# பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் **இன்று (15.05.2026 – வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில்,** மாதவரம், அண்ணா தெருவில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எனது முன்னிலையில் நடைபெற உள்ளது.

மேலும் இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர், தொகுதிப் பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேற்படி இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- 14.05.2026 நேற்று கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தமாகவும்,

நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தல் சம்பந்தமாகவும் மற்றும்

கழக ஆக்கப் பணிகள்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம்**

செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.பாலு (எ) திராவிட பாலு

### மே 15 (2013)



இளமைக் காலம் முதற்கொண்டு திராவிட இயக்கத்தில் பற்று கொண்டு திருவள்ளூர் மாவட்டம், கன்னிகைப்பேர் கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், இருமுறை எல்லாபுரம் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், மூன்று முறை கன்னிகைப்பேர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்றுமாத காலம் சிறைவாசம் அனுபவித்தவர். மேலும் கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என நான் கூறியது

# மேல் சாதி - கீழ் சாதி என மக்களை பிரிப்பதை ஒழிக்க வேண்டும் என்பதுதான்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விளக்கம்!

சென்னை, மே 15–

சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் எனப்து கோயிலுக்குப் போகக் கூடாது என்பது அர்த்தம் அல்ல! மேல் சாதி - கீழ் சாதி என மக்களை பிரிப்பதை ஒழிக்க வேண்டும் என்பதற்குத்தான் அப்படித் தெரிவித்தேன் என சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது:



**தமிழ்நாடு சட்டப்பேரவையில நான் பேசுனப்ப, ''மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும்''–னு குறிப்பிட்டேன். இதுக்காக என்னை சில பேர்** criticize **பண்றாங்க.**

**இதுக்கெல்லாம் பயப்படுற ஆள் நான் இல்ல. எதிர்ப்புலேயே வளர்ந்தது தான் திராவிட இயக்கம். அந்த வகையில, ஒரு சின்ன விளக்கத்தை மட்டும் கொடுக்க விரும்புறேன்.**

**சனாதனம் ஒழிக்கப்படணும்னு சொன்னா யாரும் கோயிலுக்கு போகக் கூடாதுனு அர்த்தம் இல்ல.**

**கோயில்ல மட்டும் இல்ல,** society**–லயும் எல்லாருக்கும்** equal **உரிமை இருக்கணும்னு அர்த்தம்.**

**மேல் சாதி – கீழ் சாதின்னு மக்களைப் பிரிக்கிறதை தான் நான் ஒழிக்கணும்னு சொன்னேன்.**

**பெரியார் – அம்பேத்கர் – அண்ணா – கலைஞர் பேசின கொள்கைய தான் நானும் பேசினேன்.**

**நாங்க யாருடைய கடவுள் நம்பிக்கைக்கும் எதிரானவங்க இல்லை. ஆனா,** Inequality**–ஐயும்,** oppression**–ஐயும் கடுமையா எதிர்ப்போம் .**

**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'–னு வள்ளுவர் சொன்னது தான் எங்க வழி!**

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்.

## தென்காசி தொகுதியில் வென்ற

# டாக்டர் கலை கதிரவன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு!

தென்காசி, மே 15-

பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்காசி தொகுதி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன், எம்.எல்.ஏ., தென்காசி தொகுதிக்குட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க்குட்பட்ட கிராமம் மற்றும் வார்டு வாரியாக வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விவரம் குறித்து தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன், எம்.பி.பி.எஸ்., அவர்கள் வருகிற 16.5.2026 முதல் 19.5.2026 வரை தென்காசி தொகுதிக்குட்பட்ட ஒன்றிய - நகர - பேரூர்களுக்குட்பட்ட கிராமம் மற்றும் வார்டு வாரியாக, தனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விவரம் பின்வருமாறு:-

**தென்காசி தெற்கு மாவட்டம்**

**ஆலங்குளம் வடக்கு ஒன்றியம்**

**16.05.2026 – சனிக்கிழமை – காலை**

ஆலங்குளம் வடக்கு ஒன்றியப் பொறுப்பாளர் எம்பிஎம்.அன்பழகன் அவர்கள் முன்னிலையில், காலை 7.00 மணிக்கு மறுக்கலான் குளத்தில் தொடங்கி, சிவலசமுத்தி ரம், தங்கம்மாள்புரம், மறுதாத்தாள் புரம், பலபத்திரராமபுரம், மாவிளியூத்து, அமுதாபுரம், கல்லத்திகுளம், வேலாயுத புரம், சண்முகாபுரம், கங்கணாங்கிணறு, அண்ணா மலைப்புதூர், மேலமருதப்பபுரம், ஊத்துமலை, வடக்குக் காவலாக்குறிச்சி, கம்மாவூர், ருக்மணியாள்புரம், தட்டப்பாறை, கண்ணாடிகுளம், முத்தம்மாள்புரம், குறிச்சாங்குளம், செவலூர், நொச்சிகுளம், நவநீதகிருஷ்ணபுரம், கீழக்கலங்கல், மேலக்கலங்கல், உச்சிப்பொத்தை, கருப்பினான்குளம், குருந்தன்மொழி ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**ஆலங்குளம் மத்திய ஒன்றியம்**

**16.05.2026 – சனிக்கிழமை – மாலை**

ஆலங்குளம் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் ஷேக் முகம்மது அவர்கள் முன்னிலையில் மாலை 5.00 மணிக்கு வீராணத்தில் தொடங்கி, அகரம், நாச்சியார்புரம், ஏந்தலூர், சோலைச்சேரி, கருவந்தா, அச்சங்குன்றம், லட்சுமிபுரம், பரங்குன்றாபுரம், மருதபுரம், மரியதாய்புரம், கரையானூர், இரதமுடையார்குளம், குறிச்சான்பட்டி, வாடியூர் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**தென்காசி கிழக்கு ஒன்றியம்**

**17.05.2026 – ஞாயிற்றுக்கிழமை – காலை**

தென்காசி கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஏஆர்எம்.அழகுசுந்தரம் அவர்கள் முன்னிலையில், காலை 7.00 மணிக்கு குத்துக்கல்வலசையில் தொடங்கி, அண்ணாநகர், கே.ஆர். காலனி, அய்யாபுரம், வேதம்புத்தூர், அழகப்பபுரம், இலஞ்சி பேரூர், காசிமேஜர்புரம், குற்றாலம் பேரூர், மேலகரம் பேரூர், பாட்டபத்து, ஆயிரப்பேரி, அங்கராயன்குளம், முத்துமாலை புரம், மத்தளம்பாறை, ஆசாத் நகர், பாட்டாக்குறிச்சி, திருச்சிற்றம்பலம் ஆகிய ஊர்களிலும் - சுந்தரபாண்டியபுரம் பேரூரிலும் நன்றி தெரிவிக்கிறார்.

**கடையநல்லூர் தெற்கு ஒன்றியம்**

**18.05.2026 – திங்கட்கிழமை – காலை 7.00 மணி**

கடையநல்லூர் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஐ.ஜெயா அவர்கள்முன்னிலையில், காலை 7.00 மணிக்கு துரைச்சாமி புரத்தில் தொடங்கி, துரைச்சாமிபுரரம் ஆதிதிராவிடர் காலனி, ரெட்டைகுளம், சீனிவாச காலனி, பூப்பாண்டியாபுரம், சுப்பையாபுரம், திரிகூடபதி, குலையநேரி, அம்மையாபுரம், ஆனைகுளம், அய்யாபுரம், அருணாச்சலபுரம் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**சுரண்டை நகரம்**

**18.05.2026 – திங்கட்கிழமை – காலை 10.00 மணி**

சுரண்டை நகரப் பொறுப்பாளர்கள் ஆ.கணேசன் மற்றும் வைகை கணேசன் ஆகியோர் முன்னிலையில் காலை 10.00 மணிக்கு பங்களாச்சுரண்டையில் தொடங்கி, கீழச்சுரண்டை, ஆலடிப்பட்டி, சிவகுருநாத புரம், அண்ணா நகர், கஸ்பா, வரகுணராமபுரம், குருங்காவனம் ஆகிய இடங்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**தென்காசி நகரம்**

**18.05.2026 – திங்கட்கிழமை – மாலை 3.00 மணி**

தென்காசி நகரப் பொறுப்பாளர் ஆர்.சாதீர் அவர்கள் முன்னிலையில், மாலை 3.00 மணிக்கு தென்காசி நகரத்திற்குட்பட்ட 1 வது வார்டு காளிதாசன் நகரில் தொடங்கி 2வது வார்டு டி.என்.எச்.பி. காலனி, 3வது வார்டு மங்கம்மாள் சாலை, 4வது வார்டு மங்கம்மாள் சாலை, 5வது வார்டு களக்கோடித் தெரு, 12வது வார்டு எல்.ஆர். எஸ். பாளையம், 13வது வார்டு தைக்காரத் தெரு, பொத்தை, 14வது வார்டு கூலக்கடை பஜார், அரிப்புகார தெரு, 17வது வார்டு மரைக்காயர் பள்ளி தெரு, 15, 6வது வார்டு மலையான் தெரு, 11வது வார்டுஆபாத் பள்ளித் தெரு, 10வது வார்டு காட்டுபாவா பள்ளித் தெரு, 18வது வார்டு நடுப்பேட்டைத் தெரு, 9, 10வது வார்டு மவுண்ட் ரோடு, மனக்காவல் தெரு, 20வது வார்டு எஸ்.கே.பி. தெரு, 21வது வார்டு சொர்ணபுரம் தெரு, புதுமனைத் தெருக்கள், 23வது வார்டு முப்புடாதி அம்மன் கோவில் தெரு, 7,8, 22வது வார்டு கீழப்புலியூர், 33வது வார்டு ஆசாத் நகர், 25, 26வது வார்டு கீழப்பாளையம், மாதாங்கோவில் தெரு, 19வது வார்டு கோவிக்கால் தெருக்கள், 27வது வார்டு பெரியபள்ளி வாசல் தெரு, 28வது வார்டு ஒப்பனைத் தெரு, 29, 32வது வார்டு சுவாமி சன்னதி, அம்மன் சன்னதி, 16வது வார்டு கன்னிமாரம்மன் கோவில் தெரு, 30வது வார்டு மாசி வீதிகள், 31வது வார்டு சிந்தாமணி ஆகிய வார்டுகளில் நன்றி தெரிவிக்கிறார்.

**கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம்**

**19.05.2026 – செவ்வாய் கிழமை – காலை 7.00 மணி**

கீழப்பாவூர் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஜே.கே.ரமேஷ் அவர்கள் முன்னிலையில், காலை 7.00 மணிக்கு திரவிய நகரில் தொடங்கி, வெள்ளைப்பனையேறிப்பட்டி, நாடக்கன்னுப்பட்டி, சீதாராமன்பட்டி, கணக்கநாடார்பட்டி, அரியப்பபுரம், ரகுமானியபுரம், சிவசைலனூர், பொடியனூர், ஆவுடையசிவன் பட்டி (ஊரணி கீழமுக்கு) கருவேல்நாடார் தெரு, மாடியனூர், ராசப்பநாடானூர், அழகம்பெருமானூர், சின்ன நாடானூர், சாலடியூர், மருதடியூர், ஆனைகுட்டியூர், ஆவுடையானூர் பேருந்து நிலையம், மாடக்கன்னுப்பட்டி, புதூர், கொண்டலூர், திப்-மீனாட்சிபுரம், திப்பணம்பட்டி மைதானம், நாட்டார்பட்டி, செந்நெல்தாபுதுக்குளம், பூவனூர், ஐயனூர், சிவநாடானூர், இராமநாதபுரம், ஆரியங்காவூர், துரைச்சாமியாபுரம், வன்னியசுந்தரபுரம், திருமலாபுரம், வெண்ணியூர், பூசைத்தாள்பட்டி, மடத்தூர், ராமச்சந்திரப்பட்டணம் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம்**

**19.05.2026 – செவ்வாய் கிழமை – மாலை 3.00 மணி**

கீழப்பாவூர் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் சீனித்துரை அவர்கள் முன்னிலையில், மாலை 3.00 மணிக்கு வேட்டையக்காரன்குளத்தில் தொடங்கி கடப்போக்கத்தி, குபேரப்பட்டணம், ராமலிங்கபுரம், மேலமெஞ்ஞானபுரம், கண்டமங்கலம், புளிச்சிக்குளம், மத்தளம்பாறை, புல்லுக்காட்டுவலசை, முப்புலியூர், அருந்ததியர்புரம், சின்னத்தம்பி நாடார்பட்டி, கல்லூரணி, செல்வவிநாயகர்புரம், குருசாமிபுரம், பாவூர்சத்திரம், வி.ஏ. நகர், மலையராமபுரம், பஞ்சபாண்டியூர், பனையடிப்பட்டி, செட்டியூர், காமராஜ் நகர் (தெற்கு), காமராஜ் நகர் (வடக்கு), குலசேகரப்பட்டி, சடையப்பபுரம், இந்திரா நகர், மேலப்பாவூர், குறும்பலாப்பேரி, தாவீது நகர், நேரு நகர் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**கீழப்பாவூர் மத்திய ஒன்றியம்**

**19.05.2026 – செவ்வாய் கிழமை – இரவு 8.00 மணி**

கீழப்பாவூர் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் எம்.சேசுராஜன் அவர்கள் முன்னிலையில் இரவு 8.00 மணிக்கு துவரங்காட்டில் தொடங்கி, இடையார்தவணை, இனாம்வெள்ளகால், இராஜபாண்டி, தாயார் தோப்பு, செம்புலிப்பட்டணம், கோவிந்தப்பேரி, வீரகேரளம்புதூர், இராஜகோபாலப்பேரி, அதிசயபுரம், இராமனூர், கலிங்கப்பட்டி, கோட்டை அண்ணா நகர் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

இவ்வாறு வே.ஜெயபாலன் அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் ஆடலரசு

### மே 15 (2007)



பொதுக்கூட்ட மேடைகளைப் பட்டிமன்றமாக – கவியரங்கமாக – வழக்காடு மன்றமாக மாற்றி பல்வேறு கோணங்களில் கழக கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்கும் வண்ணம் நகரங்களிலும், குறிப்பாக கிராம.ப்புறங்களிலும் ஆற்றலோடு உரையாற்றியவர்.

கழகக் கொள்கைகளைப் பரப்பும் முகத்தான் "தியாகம்" எனும் தலைப்பில் நாடகம் இயற்றி தாமே அதில் நடித்தவர்.

கழகம் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டு காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1997ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில் தலைமைக் கழகச் சார்பில், தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.